பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 04 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள்</u>-

1. கடந்த பத்து ஆண்டுகளில் பிஜேபி ஆட்சியின்போது நாட்டின் எல்லைப்பகுதிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

2. நாட்டின் ஜனநாயகத்தையும், அரசியல் சாசனத்தையும் பாதுகாக்க காங்கிரஸ் போராடி வருகிறது என்று அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

3. இந்திய கம்யுனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை இன்று வெளியிடப்பட்டது.

4. லாவோஸ் நாட்டில் சிக்கியிருந்த 17 இந்திய தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பெங்களூரு அணி முதலில் பேட் செய்கிறது.,

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]<<<>>>[]**

கடந்த பத்து ஆண்டுகளில் பிஜேபி ஆட்சியின்போது நாட்டின் எல்லைப்பகுதிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதாக அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் **singrauli**-யில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், காங்கிரஸ் ஆட்சியின்போது எல்லைப் பகுதியில் தீவிரவாதிகளின் ஊடுறுவல்கள் அதிக அளவில் நிகழ்ந்ததாகக் கூறினார்.

மக்களிடையே காங்கிரஸ் வெறுப்புணர்வை தூண்டும் வகையில் செயல்பட்டதாகவும், ஆனால் பிஜேபி ஜாதி மதம் மற்றும் எந்த ஒரு வகையிலும் மக்களை வேறுபடுத்தி பார்ப்பதில்லை என்று அவர் தெரிவித்தார்.

அறவழியிலும், மனிதாபிமானத்துடனும் தாங்கள் அரசியலில் ஈடுபடுவதாகவும் அவர் கூறினார்.

மத்தியிலும், மத்திய பிரதேசத்திலும் பிஜேபி ஆட்சியில் இருப்பதால் நாடு விரைவாக முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதாக திரு ராஜ்நாத்சிங் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

கடந்த பத்து ஆண்டுகளில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு ஒரு லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி உள்ளதாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி ஸ்மிருதி இரானி தெரிவீத்துள்ளார்.

தமிழகத்தின் வடசென்னை நாடாளுமன்ற தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், முந்தைய காங்கிரஸ் ஆட்சியின்போது தமிழகத்திற்கான நலத்திட்டங்கள் கொண்டுவரப்படவில்லை என்று கூறினார்.

நாட்டின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் பாதுகாக்கும் வகையில் சிறப்பான ஆட்சியை தமது கட்சி வழங்கி வந்ததாக அவர் தெரிவித்தார்.

ஜனநாயகத்தை உறுதி செய்ய தங்கள் கட்சியால் மட்டுமே முடியும் என்றும் திருமதி ஸ்மிருதி இரானி கூறினார்.

[]<<<>>>[]

நாட்டின் ஜனநாயகத்தையும், அரசியல் சாசனத்தையும் பாதுகாப்பதற்காக காங்கிரஸ் போராடி வருகிறது என்று அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜூன் கார்கே தெரிவித்துள்ளார்.

ஜெய்ப்பூரில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், தமது கட்சியின் ஆட்சிக் காலங்களில் நாடு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்ததாகக் கூறினார்.

இந்திய தொழில்நுட்ப கல்விக்கழகம் மற்றும் இந்திய மேலாண்மை கல்விக் கழகம் உள்ளிட்டவை தொடங்கப்பட்டதாகவும் அவா தெரிவித்தார்.

தங்கள் ஆட்சியின்போது கட்டமைக்கப்பட்ட ரயில்ப்பாதைகளில் புதிய ரயில்களை மட்டும் பிஜேபி தொடங்கி வைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சோனியாகாந்தி, கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சிக்கான எந்த பணியையும் பிஜேபி மேற்கொள்ளவில்லை என்றும், வேலையின்மை, பணவீக்கம் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் அதிகரித்துள்ளதாகக் கூறினார்.

[]<<<>>>[]

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை இன்று புதுதில்லியில் வெளியிடப்பட்டது.

குடியுரிமை திருத்தச் சட்டம் நீக்கப்படும் என்றும், இடஒதுக்கீட்டுக்கான உச்சவரம்பு நீக்கப்படும் என்றும், ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் அக்கட்சியின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் தின ஊதியம் 700 ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அக்கட்சியின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையை வெளியிட்டு பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு டி ராஜா, ஜனநாயகம் மற்றும் சமய சார்பற்ற நாட்டை உருவாக்க தங்களது கூட்டணி பாடுபடுவதாக தெரிவித்தார்.

மாநில சுயாட்சிக் கொள்கை மற்றும் மக்களின் உரிமைகளை பாதுகாக்க மத்தியில் ஆட்சி மாற்றம் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா உள்ளிட்ட ஐந்து பேர் இன்று மாநிலங்களவை உறுப்பினர்களாக பதவியேற்றனர்.

அவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அவர்களுக்கு பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்து வைத்தார்.,

காங்கிரஸ் கட்சியின் திரு அனில்குமார் யாதவ், பிஜேபி-யின் திரு அசோக்ராம் சவான், திரு Chunnilal Garasiya , திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் திருமதி Susmita Dev, திரு Mohammad Nadimul ஆகியோரும் இன்று பதவியேற்றனர்.

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் தேர்தல் ஆணையத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் மாவட்டந்தோறும் இது தொடர்பான நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமைய வாக்களிக்க வேண்டியது நமது கடமை என்று தேனி மாவட்டத்தைச் சேர்ந்த முதல் முறை வாக்காளர்கள் தெரிவித்தனர்.

[]<<<>>>[]

திரிபுரா மாநிலம் அகர்தலாவில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை தேர்தலுக்கு தயார்படுத்தும் பணிகள் பலத்த பாதுகாப்புக்கு இடையே நடைபெற்று வருகின்றன.

இம்மாதம் 19-ஆம் தேதி வாக்குப்பதிவுக்காக பயன்படுத்தப்படும் இந்த எந்திரங்களை தயார் செய்யும் பணி இரண்டு நாட்களுக்கு நடைபெறும்.

அம்மாநிலத்தில் 793 வாக்குச்சாவடிகளில் இவை பயன்படுத்தப்பட உள்ளன.

விவி பேட் எந்திரங்களில் சின்னங்களை பதிவேற்றும் பணியும் நடைபெற்று வருகிறது.

[]<<<>>>[]

விவசாயிகளுக்கு எதிராக பிஜேபி தலைமையிலான அரசு சட்டம் கொண்டு வந்ததால் தலைநகர் தில்லியில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருவதாக விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு தொல் திருமாவளவன் கூறியுள்ளார்.

தமிழகத்தின் பெரம்பலூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், தங்களது கூட்டணி வெற்றிபெற்றால் பெண்களின் வாழ்க்கைத்தரம் உயரும் என்றும், நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்றும் கூறினார். 100 நாள் வேலை திட்டத்தில் ஊதியம் உயர்த்தி வழங்கப்படும் என்றும், நியாயவிலைக் கடைகள் மேம்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

லாவோஸ் நாட்டில் சிக்கியிருந்த 17 இந்திய தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்த தகவலை தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பாதுகாப்பற்ற மற்றும் சட்டவிரோத தொழில்களில் இவர்களை அந்நாட்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தியதாக தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்களை மீட்க லாவோசில் உள்ள இந்திய துணை தூதரகம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும், ஒத்துழைப்பு நல்கிய லாவோ நாட்டு அதிகாரிகளுக்கும் தமது நன்றியையும் பாராட்டுக்களையும் அவர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தலைநகர் தில்லி மற்றும் ஹரியானாவில் குழந்தை கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளின் கட்டமைப்பை மத்திய புலனாய்வு பிரிவு சிபிஐ வெளிக் கொண்டு வந்துள்ளது.

சிபிஐ மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 15 நாட்களே ஆன இரண்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் மீட்கப்பட்டுள்ளனர்.

குற்றவாளிகளிடமிருந்து ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் ஆவணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சமூக வலைதளங்கள், முகநூல் பக்கம் மற்றும் வாட்ஸ்-அப் மூலமாக கடத்தல்காரர்கள் தொடர்பு வைத்திருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

ஜெய்ப்பூரில் இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி, பெங்களூரு அணியை முதலில் பேட் செய்யுமாறு பணித்தது.

[]<<<>>>[]

இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான ஹாக்கி போட்டித் தொடர் **Perth** நகரில் இன்று தொடங்கியது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இன்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா ஐந்துக்கு – ஒன்று என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது,

[]<<<>>>[]

கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அனுபமா உபாத்தியாயாவும், **Tharun Mannepalli** -யும் பட்டம் வென்றனர்.

அஸ்தானாவில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அனுபமா உபாத்தியாயா 21-15, 21-16 என்ற செட் கணக்கில் இஷாராணி பரூவா-வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் **Tharun Mannepalli** 21-10, 21-19 என்ற செட் கணக்கில் மலேசியாவின் **Soong Jooven –**ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் **Sanjai Srivatsa Dhanraj - Maneesha** இணை, மலேசிய இணையிடம் தோல்வியடைந்தது.

***End of News***